# <u>செயற்குழுக் கூட்டம் (16.04..2022)</u>

இன்று (16.04..2022) நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.அனத்து செயலாளர்களும் பங்கேற்றனர்.

1. இயக்கத்தின் இவ்வாண்டின் (2021-2022) வருடாந்திர வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. வரவு-செலவு கணக்கு சரியானதாக தீர்மானம் நிறைவேறியது.

2. உறுப்பினர் ஆவதற்கு விண்ணப்பிக்கப்பட்ட கீழ்கண்ட விண்ணப்பங்கள் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டது.

- திரு அ, திரு.வி.சந்திரன் அவர்கள் ஆண்டு உறுப்பினரிலிருந்து ஆயுள் உறுப்பினராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- திரு ஆ, திரு.ராஜேஷ் கணேசன் அவர்களின் விண்ணப்பம் ஆயுள் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளபடுகிறது.
- திரு இ, திரு.ராதா கிருஷ்ணன் அவர்களின் விண்ணப்பம் புதிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்ட பின் பரிசீலிக்குமாறு முடிவு எடுக்கப்பட்டது.
- திரு ஈ, திரு. இப்ராஹிம் என்பவர் 2 ஆண்டுகளுக்கு முன் தற்காலிக நீக்கம் கொடுக்கப்பட்டது. அது நீக்கப்பட்டு, ஆயுள் உறுப்பினராக தொடர தீர்மானம் நிறைவேறியது. (20.12.2019 நிர்வாககுழுக் கூட்டம் தீர்மானம் :வரிசை எண்ணின் படி)
- திரு. பாலாஜி அவர்களின் விண்ணப்பம் ஆண்டு உறுப்பினரிலிருந்து ஆயுள் உறுப்பினராக தீர்மானம் ஏற்கப்பட்டது.

3. இயக்கத்தில் உச்சநீதிமன்றத்தில் வாதாட ஏற்படும் செலவுகளுக்கு தனி கணக்கு (Account) வைத்துக் கொள்ளுமாறு தீர்மானம் நிறைவேறியது.. சட்டநிதி (LEGAL FUND) என்று ஒன்று ஏற்படுத்தி, நன்கொடைகள் அனைத்தும் அதில் வரவு வைத்துக் கொள்ளப்படும்.

4. விரைவில் இவ்வருட பொதுக்குழு நடைபெறவுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுகளின் செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டி உள்ளது. அதற்குரிய தேர்தலை, அக்கூட்டத்தில் நடைபெறும். கீழ்கண்ட தேர்தல்குழுவை நிறுவி செயலாளர்களைத் தேர்வு செய்ய முடிவு செய்யப்பட்டது.

1. திரு.வி.முத்துசாமி (488) -குழுத்தலைவர்
2. .திரு.ஆர்.பாலாஜி (386) -உறுப்பினர்
3. .திரு.கே.சதிஷ்குமார் (136) -உறுப்பினர்

இக்குழு விரைவில் தேர்தல் அறிக்கை வெளியிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

5. பொதுச் செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

ந.சுப்ரமணியன்
தலைவர்

வி.கார்திகைராஜன்
பொதுசெயலர்